# பெரியாரைத் துணைக்கோடல்

சே.கோகுலாச்சாரி

**ஆசிரியர், ஆலய தரிசனம்**

# ஆலய தரிசனம்

**ஆலய தரிசனம் அறக்கட்டளை இணைந்து வெளியிடுவது**

**66 ஏ கடலூர் மெயின் ரோடு**

**புவனகிரி**

முதல் பதிப்பு 2026

காப்புரிமை (ஆசிரியருக்கு)

விலை ரூபாய் 60

அச்சிட்டோர்

ஸ்ரீ பாலாஜி பிரிண்டர்ஸ், புவனகிரி

# வாழ்க புலவர் த.செயராமன்

புவனகிரியில் திருக்குறள் இயக்கம் பல்லாண்டுகளாக, ஒவ்வொரு மாதமும் ஒரு ஞாயிற்றுக்கிழமை திருக்குறள் வகுப்பு நடத்தி வருகிறது. அதில் அவ்வப்பொழுது அடியேனும் கலந்துகொண்டு வகுப்பு நடத்தும் வாய்ப்பில் இணைவேன்.

அப்படிக் கிடைத்த வாய்ப்பு தான் திருக்குறளின் 45 ஆவது அதி காரமாகிய பெரியாரைத் துணைக்கோடல்.



சில குறிப்புகளைத் தயாரித்து, அதை ஒரு மணி நேரம் பேசி, அப்படியே விட்டு விடுவதை விட அந்த குறிப்பு களைக் கொண்டு ஒரு விரிவான விளக்க நூலை எழு துவது சிறந்தது என்று நினைத்தேன்.

அடியேன், 40 வருடங்களுக்கும் மேலாக தமிழ் இலக் கியங்கள், வைணவ இலக்கியங்கள், வாழ்வியல் கருத்துக்கள் என பல மேடை களில் பேசி வருகிறேன். பல இதழ்களில் எழுதி வருகிறேன். பல நூல்களையும் வெளியிட்டு வரு கிறேன். அந்த வகையில் இனி எஞ்சியுள்ள வாழ்நாளில் இதுவரை பேசிய பேச்சுக்கள் எழுதிய எழுத்துக்களை பல்வேறு தலைப்புகளில் சிறு நூலாக வெளியிட வேண்டும் என்று திட்டமிட்டு அதில் முதல் நூலாக இந்த நூலை வெளியிடு கின்றேன்.

அப்படி வெளியிடுகின்ற பொழுது ஒவ்வொரு நூலிலும் நம் முடைய வாழ்நாளில் ஏதாவது ஒரு வகையில் நம்மை ஈர்த்த நண்பர்களைப் பற்றி பாராட்டுரையாக சில கருத்துக்களை பதிவு செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன்.

அந்த வகையில் திருக்குறளைப் பற்றிய இந்த நூலுக்கு யார் பொருத்தமானவர் என்று நினைத்தபொழுது முதலில் என்னு டைய நினைவுக்கு வந்தவர் எண்பது அகவை கடந்த இனிய நண்பர் ஆசுகவி திருக்குறள் சுடர் புலவர் த செயராமன் அவர்கள்.

அவருடைய அற்புதமான அழுத்தமான தமிழ் என்னை ஆட் கொள்ளும்.

அதில் எதுகை இருக்கும் ;மோனை இருக்கும் ;இனிய சந்தம் இருக்கும்; அழகான உவமைகள் இருக்கும்.

கையில் எந்த குறிப்பும் இல்லாமல் நினைத்த நேரத்தில் கவி பாடும் ஆற்றல் ஒரு சிலருக்கே உண்டு. அதில் புலவர் செயராமன் அவர்களுக்கு மிகச்சிறந்த இடம் உண்டு.

தமிழ் எங்கு எங்கு ஒலித்தாலும் அங்கே த செயராமன் இருப்பார். திருக்குறளின் 1330 குறட்பாக்கள் அவருக்கு தலை கீழ் பாடம் என்பார்கள்

அது சில புலவர்களுக்கு மனப்பாடமாக இருக்கலாம்.

ஆனால் வாழ்க்கை பாடமாகவும் இருக்க வேண்டும் என்று நினைத்து பின்பற்றுபவர்களின் ஒருவராக திரு செயராமன் அவர்களைக் கருதுகின்றேன்.

அவருக்கும் எனக்கும் கொள்கை ரீதியில் வேறுபாடு உண்டு.

அவர் கடவுள் இல்லை என்பவர்.

நான் கடவுள் இருக்கிறார் என்று நினைப்பவன்.

இரண்டிலும் உள்ள ஒரே ஒற்றுமை "கடவுள்" என்ற சொல் தான்.

கடவுள் மறுப்புக் கொள்கை எந்த விதத்திலும் நட்பை கெடுத்து விடக் கூடாது என்பதில் ஆழ்ந்த கவனம் கொண் டவர் த செயராமன் அவர்கள்.

சங்க இலக்கியங்களில் அவருடைய ஈடுபாடு அபாரமானது.

"இன்னா செய்தாரை ஒறுத்தல்" என்பது குறள் காட்டும் நெறி. இதை ஒரு ஒருமுறை அவர் தன்னுடைய வாழ்க்கைச் சம்ப வத்தோடு இணைத்துக் காட்டிய போது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

சிறந்த நீச்சல் வீரராகவும் விளையாட்டு வீரராகவும் விளை யாட்டில் ஆர்வம் உள்ளவராகவும் இருப்பவர் தான் செயராமன் அவர்கள்.

குடும்பத்தோடு விரோதம் கொண்ட ஒருவர் ஆற்று வெள் ளத்தில் தத்தளித்த போது, குடும்ப விரோதத்தை மனதில் கொள்ளாமல் அவரைக் காப்பாற்றியதாக ஒரு முறை அவர் மேடையில் சொன்னதாக ஞாபகம்.

இந்த உணர்வை அவருக்குத் தந்தது திருக்குறள்.

அசைவம் உண்பதோ உண்ணாததோ அவரவர்கள் வாழ்வியல் நெறி. ஆனால் கொல்லாமை, புலால் உண்ணாமை என்கின்ற இரண்டு அதிகாரத்தை வள்ளுவர் வகுத்துத் தந்த பிறகு, தான் குடும்ப வழக்கத்தில் அசைவ உணவுக்காரனாக இருந்தாலும் கூட, சைவ உணவு உண்ணுவதுதான் திருவள்ளுவருக்கு செய்யும் நேர்மையாக இருக்கும் என்பதை தன்னுடைய வாழ் நாளில் கடைப்பிடிப்பவர்.

"கற்க ; நிற்க அதற்குத் தக" என்கின்ற வார்த்தை வெறும் வார்த்தை அல்ல ;அது வாழ்க்கையில் பின்பற்றப்பட வேண்டிய பாடம் என்பதை அவர் உடனடியாக செயல்பாட்டுக்குக் கொண்டு வந்த நிகழ்ச்சி,அவர் 1330 பாக்களை மனப்பாடமாகச் சொல்வதை விட அருமையாக எனக்கு இருந்தது.

கடவுளுக்கு என்ன பிடிக்கும் என்று ஆத்திகவாதிகள் புத்த கங்களில் எழுதி உள்ள சில கருத்துக்களை வைத்துக் கொண்டு அதன்படி நடந்து கொள்வார்கள்.

இவர் ஆன்மிக புத்தகங்களை எல்லாம் நம்புபவர் அல்ல.

ஆனால் கடவுள் தத்துவம் சொல்லுகின்ற அன்பு, அடக்கம், பிறருக்கு உதவுதல், நன்றி மறவாமல் இருத்தல்,போன்ற கருத் துக்களை இவர் கடவுள் நம்பிக்கை இல்லாமல் பின்பற்றி னாலும், "கடவுளின் நம்பிக்கைக்கு உரியவராகத்" திகழ்கிறார் என்பது எனது நம்பிக்கை.

இவரைப் பற்றியோ இவருடைய குடும்பத்தை பற்றியோ எனக்கு அதிகம் தெரியாது. ஆயினும் இவருடைய தமிழ் ஆர் வத்தையும், திருக்குறள் நெறி திக்கெங்கும் பரவ வேண்டும் என்கின்ற தணியாத தாகத்தையும் அறிவேன்.

அந்த அடிப்படையில் எண்பது அகவையிலும் உண்பதும் உறங் குவதும் உயிர் வாழ்வதும் தமிழ்நாட்டுக்கும் தமிழுக்கும் திருக் குறளுக்கும் என வகுத்துக்கொண்டு வாழும் இவரை பாராட்டு கிறேன். ஆலய தரிசனத்தின் இந்த நூலை அவருக்குரிய பாராட்டு நூலாக அடியேன் இன்று வெளியிடுவதில் பெருமை கொள்கின்றேன்.

-சே.கோகுலாச்சாரி,புவனகிரி

**தி**ருக்குறள் மூன்று பிரிவுகளாக 1330 குறட்பாக்களோடு உள்ளது. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என பிரிக்கப்பட் டிருக்கிறது நம் எல்லோருக்கும் தெரியும்.. நடுவில் பொருள். ஒருபக்கம் அறம்.ஒருபக்கம் இன்பம்.என்ன காரணம் ? கொஞ்சம் யோசிப்போம்.

வாழ்வின் தொடக்கம் அறத்தில் இருக்க வேண்டும். நல்வழி, ஒழுக்கம், நேர்மை ஆகியவற்றைத்தான் வள்ளுவர் முதலில் வைக்கிறார். ஒரு மனிதன் சம்பாதிப்பதற்கும், இன்பத்தை நுகர்வதற்கும் தகுதியானவனாக மாறுவது இந்த அறத்தினால் தான்.

இதில் பொருள் நடுவில் இருப்பது ஒரு குறியீடாகக் கூட பார்க்கலாம்.

**அறம் இல்லாத பொருள், அநியாயமாக மாறிவிடும்.**

**பொருள் இல்லாத இன்பம், நிலைக்காத கனவாகிவிடும்.**

வள்ளுவர் காட்டும் வாழ்க்கை என்பது துறவறம் அல்ல; இல்லறம். இல்லறம் நல்லபடி நடக்க 'பொருள்' (செல்வம்/வசதி) மிக முக்கியம். ஆனால், அந்தப் பொருளை எப்படிச் சம்பாதிக்க வேண்டும்?இடது பக்கம் இருக்கும் அறத்தின் வழியில் நின்று தான் பொருளை ஈட்ட வேண்டும்.அப்படி ஈட்டிய பொருளைக் கொண்டுதான் வலது பக்கம் இருக்கும் இன்பத்தை (குடும்ப வாழ்வை) அனுபவிக்க வேண்டும்.

**"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து**

**தீதின்றி வந்த பொருள்." (குறள்: 754)**

(அதாவது, தீமையற்ற வழியில் சேர்த்த பொருள் ஒருவருக்கு அறத்தையும் தரும், இன்பத்தையும் தரும்).

அறவழியில் சேர்த்த பொருளைக் கொண்டு, தர்மநெறி மாறாமல் வாழும் போது கிடைக்கும் இன்பமே நிலையானது, தூய்மை யானது.

பொருள் என்பது ஒரு தராசின் முள் போன்றது. அது ஒரு பக்கம் 'அறம்' என்னும் தார்மீகக் கடமையோடும், மறுபக்கம் 'இன்பம்' என்னும் வாழ்வியல் மகிழ்ச்சியோடும் சமநிலையில் பிணைக் கப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு தராசின் ஒரு தட்டில் அறம், மற்றொரு தட்டில் இன்பம் இருந்தால், அவற்றைச் சமநிலைப்படுத்தும் மைய அச்சாகப் பொருள் இருக்கிறது. ஆனால் அந்தப் பொருள் அறத்தின் கட்டுப் பாட்டுக்குள் இருக்க வேண்டும்; இல்லையெனில் இன்பமும் கெடும், சமூகமும் கெடும்.

அதனால்தான் வள்ளுவர் முதலில் அறத்தைப் போதித்து, பிறகு பொருளைப் பற்றி விளக்கி, இறுதியில் இன்பத்தைப் பேசுகிறார்.

நல்லவனாக இரு.

நல்ல முறையில் பொருள் ஈட்டு.

பிறகு வாழ்க்கையின் இன்பத்தை அனுபவி.

என்ற வாழ்க்கை நெறியைத் திருக்குறளின் அமைப்பே அமைதியாகச் சொல்கிறது என்று பல அறிஞர்கள் விளக்குகின்றனர்.

இது வெறும் அதிகாரப் பிரிவு அல்ல; மனித வாழ்க்கையின் பயண வரைபடமாகவும் பார்க்கலாம்.

## அதிகார வரிசையில் அதிகாரம்-45

**வ**ள்ளுவர் அதிகாரங்களை வரிசைப்படுத்தியிருக்கும் விதம் ஒரு சிறந்த மனிதனை/தலைவனை உருவாக்கும் படிநிலைகள் போன்றது.

**அதிகாரம் 39. இறைமாட்சி:**

ஒரு தலைவனுக்கு (அரசனுக்கு) இருக்க வேண்டிய அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் போன்ற அடிப்படைப் பண்புகளை முதலில் சொல்கிறார்.

**அதிகாரம் 40. கல்வி:**

ஆனால், வெறும் பிறப்பு அல்லது பதவி மட்டும் ஒருவனைச் சிறந்த அரசன் ஆக்கிவிடாது. அதற்கு முறையான கல்வி வேண்டும். கற்றல் மூலமே ஒருவனுடைய அறிவு விசாலமடையும்.

**அதிகாரம் 41. கல்லாமை:**

கல்வி கற்காமல் இருந்தால் என்ன நடக்கும்? அவன் எவ்வளவு பெரிய குடியில் பிறந்திருந்தாலும், கல்லாதவன் உலகத்தாரால் மதிக்கப்பட மாட்டான் என்று எச்சரிக்கிறார்.

**அதிகாரம் 42.கேள்வி:**

சரி, ஒருவனால் படிக்க முடியாவிட்டால் அவனுக்கு அறிவே வளராதா? அதற்கும் வள்ளுவர் வழி சொல்கிறார். அதுதான் கேள்வி (காதால் கேட்டுப் பெறும் அறிவு). நூல்களைப் படிக்கா விட்டாலும், கற்றறிந்த பெரியோர்களின் சொற்களைக் கேட்டறி வது, ஒருவனுக்கு ஆபத்துக் காலத்தில் ஊன்றுகோல் போல உதவும் என்கிறார்.

**அதிகாரம் 43. அறிவுடைமை:**

கல்வியும் கேள்வியும் ஒருவனுக்குள் எதை உருவாக்க வேண் டும்? அறிவுடைமையை உருவாக்க வேண்டும். எது வந்தாலும் தாங்கும் பலகை போன்றது அறிவு.

**அதிகாரம் 44. குற்றங்கடிதல்:**

அறிவு வந்துவிட்டால் ஒருவன் என்ன செய்ய வேண்டும்? தன் மீது இருக்கும் குற்றங்களை (காமம், வெகுளி, கடும்பற்று போன்றவற்றை) ஆராய்ந்து நீக்க வேண்டும்.

"***தன் குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்***

***என் குற்றம் ஆகும் இறைக்கு***." (குறள்: 436)

(தன்னிடமுள்ள குறையை முதலில் நீக்கி, அதன் பின் பிறர் குறையைக் காணும் தலைவனுக்கு என்ன துன்பம் வரும்?)

**அதிகாரம் 45. பெரியாரைத் துணைகோடல்:**

ஒருவன் அரசனாக இருக்கலாம், படித்தவனாக இருக்கலாம், கேள்வியறிவு மிக்கவனாக இருக்கலாம், தன் குற்றங்களைக் களைந்தவனாகவே இருக்கலாம்... ஆனாலும் அவனுக்கு ஒரு வழிகாட்டி (Mentor) தேவை. காரணம், எவ்வளவுதான் அறிவு இருந் தாலும் சில நேரங்களில் சுயநலம் அல்லது சூழ்நிலை நம் கண்ணை மறைக்கலாம். அப்போது இடித்துரைத்து நல்வழிப் படுத்த நம்மை விட மூத்த, அறிவுடைய பெரியவர்களின் துணை அரசன் முதல் மனிதன் வரை அனைவருக்கும் அவசியம் என்கிறார்.

இங்கே வள்ளுவர் மிகப் பெரிய அரசியல் ஞானத்தைச் சொல் கிறார்:

***அரசனாக இருந்தாலும்,***

***கல்வியறிவு உடையவனாக இருந்தாலும்,***

***அறிவாளியாக இருந்தாலும்,***

***வழிகாட்ட நல்ல பெரியோர்களின் துணை அவசியம்***.

இது தலைமைத்துவத்தின் ஒரு நிரந்தர விதி. அறிவு ஒருவரிடம் இருக்கலாம்; ஆனால் அனுபவம் பலரிடம் இருந்து கிடைக்கும். அதனால் நல்ல ஆலோசகர்கள், சான்றோர், பெரியோர் ஆகி யோரைச் சுற்றி வைத்துக்கொள்வது அரசனின் கடமை என வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

அதாவது,

"அதிகாரம் பெற்றவனாக இருப்பது போதாது;

கற்றவனாக வேண்டும்.

கற்றது போதாது;

கேட்டறிய வேண்டும்.

கேட்டது போதாது;

அறிவாக மாற்ற வேண்டும்.

அறிவு போதாது;

குற்றங்களை நீக்க வேண்டும்.

அதுவும் போதாது;

பெரியோரின் வழிகாட்டுதலை ஏற்க வேண்டும்.

என்பதே அதிகார வரிசையின் உள்ளார்ந்த செய்தி.

இதுவே திருக்குறளின் தனிச்சிறப்பு. ஒவ்வொரு அதிகாரமும் தனித்து நிற்பதோடு, அடுத்த அதிகாரத்துடன் இயல்பான தொடர்பும் கொண்டிருக்கிறது.

இனி, இந்த அதிகாரத்தின் குறட்பாக்களை ஒவ்வொன்றாகக் கற்போம் .

## குறள் 1 - யார் பெரியார்?

## அறன்  அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை

## திறன்  அறிந்து தேர்ந்து கொளல்

**பதவுரை**: அறன்-நல்வினை; அறிந்து-தெரிந்து; மூத்த-முதிர்ந்த; அறிவுடையார்-அறிவுடையவர்; கேண்மை-உறவு, நட்பு; திறன்-கூறுபாடு; அறிந்து-தெரிந்து; தேர்ந்து-ஆராய்ந்து; கொளல்-கொள்க.

**திரண்ட பொருள் இது.**

அறம் உணர்ந்தவராய்த் தன்னைவிட மூத்தவராய் உள்ள அறி வுடையவரின் நட்பைக், கொள்ளும் வகை அறிந்து ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

.பெரியாரை துணை கொள்ள வேண்டும்,சரி.யார் பெரியார்? வள்ளுவர் "பெரியார்" என்ற சொல்லுக்கு வெறும் பதவி, செல்வம், கல்விப்பட்டம் அல்லது வயது ஆகியவற்றை மட்டுமே அளவுகோலாக வைக்கவில்லை.

1.வெறும் புத்தகப்படிப்பு போதாது .பரிமேலழகர்  அறநுண்மை நூலானேயன்றி, உய்த்துணர்வானும் அறிய வேண்டுதலின், 'அறம் அறிந்து' என்றார்.சட்டப்புத்தகத்தைப் படித்துவிட்டு அற மற்ற வாதம் செய்தால்,அதர்ம வழி காட்டினால், தன் சுயநலத்திற்காகவோ அல்லது தீய வழிக்கோ வாதாடினால்

ஒருபோதும் அவர் பெரியவர் ஆக முடியாது. பரிமேலழகர் காட்டும் "உய்த்துணர்வு" (Intuition/Deep Understanding) என்பது மிக முக்கியமானது.

கசடு அறக் கற்றவனும் கற்றபடி நிற்பவனும்தான் பெரியவர். எந்தச் சூழ்நிலையிலும் எது தர்மம், எது நியாயம் என்று தன் உள்மனதால் உணர்ந்து, அதன்படி நடப்பவரே அறம் அறிந்தவர்.

2.அடுத்து மூத்த என்ற வார்த்தை முக்கியம்..தலைமுடி நரைத்து விட்டதால் மட்டுமே ஒருவருக்கு அனுபவமும் சீலமும் வந்து விடுவதில்லை.வயது,அறிவு சீலம் (குணம்)என அனைத்திலும் மூத்தவர் பெரியார்.அனுபவம் பேச வேண்டும். அறிவுஉடையார் என்கிறார். நீதியையும் உலக இயலையும் அறிதலை உடையார் பெரியார்..

1.வயதால் மூத்தவர்: உலக வாழ்க்கையின் பல ஏற்ற இறக்கங் களை, மனிதர்களைப் பார்த்த அனுபவம் கொண்டவர்.

2.அறிவால் மூத்தவர்: காலத்திற்கு ஏற்றவாறு சிந்திக்கும் முதிர்ச்சி கொண்டவர்.

3.சீலத்தால் (குணத்தால்) மூத்தவர்: ஒழுக்கத்திலும், சுயக் கட்டுப் பாட்டிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்பவர்.

இந்த மூன்றும் இணையும் போதுதான் அங்கு "அனுபவம் பேசும்."

வள்ளுவர் அறிவுடையார் என்று இங்கே குறிப்பிடுவது, உலக இயல்பை அறிந்தவர்களைத்தான்.

உலகம் எப்படி இயங்குகிறது, மனிதர்களின் பலவீனம் என்ன, எப்போது எப்படிச் செயல்பட வேண்டும் என்ற "உலகியல் அறிவு" அவரிடம் இருக்க வேண்டும். அத்தகைய பேரறிவு கொண்ட வரைத்தான் அரசன் தன் பக்கத்தில் வைத்திருக்க வேண்டும்.

அதனால்தான் வள்ளுவர் "பெரியாரைத் துணைக்கோடல்" என்ற அதிகாரத்தை "அறிவுடைமை"க்குப் பிறகு வைத்திருக்கிறார். அறிவு பெற்ற பிறகும், தன்னைவிட மேம்பட்ட அறிவும் அனு பவமும் உடையவர்களின் நட்பும் ஆலோசனையும் தேவை என்பதை உணர்த்துகிறார். உண்மையான அறிவின் அடை யாளமே, தன்னைவிட உயர்ந்தவர்களை அறிந்து அவர்களிடம் கற்றுக்கொள்ளும் பணிவுதான். அதுவே வள்ளுவர் காட்டும் தலைமைப் பண்பாகும்.

## இரண்டாவது குறள்

**உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**

**பெற்றியார்ப் பேணிக் கொளல்**

வந்துள்ள துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராதபடி முன்ன தாகவே காக்கவல்ல தன்மையுடையவரைப் போற்றி நட்புக் கொள்ள வேண்டும்.

**பதவுரை:**

உற்ற-நேர்ந்த; நோய்துன்பம்; நீக்கி-விலக்கி; உறாஅமை-வாராவண்ணம்; முன் -(வரு)முன்னால்; காக்கும்-காப்பாற்றும்;

பெற்றியார்-தன்மையுடையார், இயல்புடையர்; பேணி-நலன்பாராட்டி, உவப்பன செய்து; கொளல்-கொள்க.

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்" என்பதில் வள்ளுவர் வெறும் ஆறுதல் கூறுபவரைப் பற்றிச் சொல்லவில்லை; பிரச்சினையைத் தீர்க்கும் அறிவும், மீண்டும் வராமல் தடுக்கும் முன்னோக்குப் பார்வையும் உடைய வரைப் பற்றிச் சொல்கிறார்.

**1. உற்றநோய் நீக்கி**

முதலாவதாக, வந்த துன்பத்தை நீக்குதல் (Reactive Measure): நமக்கு ஒரு பிரச்சினை அல்லது கஷ்டம் வரும்போது, பதற்றப்படாமல் அதைச் சரிசெய்வதற்கான சரியான ஆலோசனையையும் வழியையும் வழங்கும் தகுதி படைத்தவர்கள் நமக்குத் தேவை. ஏற்கனவே வந்த துன்பம், இழப்பு, குழப்பம், தவறு ஆகியவற்றை நீக்க வேண்டும்.

உதாரணமாக:

கடனில் சிக்கியவனை அதிலிருந்து மீட்பது.

நோயுற்றவனுக்கு சிகிச்சை செய்து குணப்படுத்துவது.

தவறான முடிவால் ஏற்பட்ட நஷ்டத்தைச் சரிசெய்வது.

இரண்டாவதாக, இனி வராமல் தடுக்கும் வழி

"வருமுன் காப்பதே சிறந்தது." ஒருமுறை வந்த தவறு அல்லது துன்பம் மீண்டும் நம் வாழ்க்கையில் வராதபடி, முன்கூட்டியே

எச்சரித்து, நம்மை நல்வழிப்படுத்தும் தீர்க்கதரிசனம் கொண்டவர்களின் நட்பு நமக்குக் கேடயமாக அமையும்.

உதாரணமாக:

கடனைத் தீர்ப்பதோடு நிற்காமல், மீண்டும் கடன் சிக்கலில் விழாதபடி வரவு-செலவுத் திட்டம் கற்றுக் கொடுப்பது.

நோயைக் குணப்படுத்துவதோடு, உணவு மற்றும் வாழ்க்கை முறையைச் சீர்செய்து நோய் திரும்ப வராமல் காப்பது.

தவறான பழக்கத்தை மாற்றி எதிர்காலப் பிரச்சினையைத் தடுப்பது.

இதனால்தான் பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்கள், "**தற்போதைய இடரை நீக்குவதும், எதிர்கால இடரைத் தடுப்பதும் ஆகிய இரண்டையும் செய்ய வல்லவரே பெரியார்**" என்று பொருள் கூறுகின்றனர்.

இத்தகைய முன்னறிவும் அனுபவமும் உள்ளவரையே துணையாகக் கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவரின் கருத்து.

இந்தக் குறளுக்கு மிகப்பொருத்தமான ஒரு வரலாற்றுச் சம்பவத்தை மகாபாரதத்திலிருந்து பார்க்கலாம். பாண்டவர்களின் வாழ்க்கையில் ஸ்ரீ கிருஷ்ணர் ஆற்றிய பங்கு, இந்தக் குறளான "உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்" என்பதற்கு மிகச்சிறந்த உதாரணமாகும்.

பாண்டவர்கள் கிருஷ்ணரைத் தங்கள் வழிகாட்டியாகவும், உற்ற நண்பராகவும் போற்றித் தங்களோடு வைத்துக் கொண்டனர். கிரு ஷ்ணர் அவர்களுக்கு இரண்டு விதங்களில் துணையாக இருந்தார்:

சூதாட்டத்தில் அனைத்தையும் தோற்று, திரௌபதிக்குச் சபையில் மானபங்கம் நடந்தபோது பாண்டவர்கள் செய்வ தறி யாது திகைத்து, பெரும் துன்பத்தில் ஆழ்ந்திருந்தனர். அது அவர்களுக்கு 'உற்றநோய்' (வந்த துன்பம்).

அப்போது திரௌபதியின் மானத்தைக் காத்து, பாண்டவர்களின் துயரத்தைத் துடைத்து, அவர்களை அந்தப் பெருந்துன்பத்தில் இருந்து மீட்டவர் கிருஷ்ணர்.

பாண்டவர்களுக்கு மீண்டும் அப்படி ஒரு நிலை வரக்கூடாது என்பதிலும், அவர்கள் இழந்த உரிமையைப் பெற வேண்டும் என்பதிலும் கிருஷ்ணர் உறுதியாக இருந்தார்.மகாபாரதப் போர் தொடங்குவதற்கு முன்பே, அர்ஜுனனுக்கு பகவத் கீதை என்னும் உன்னத அறிவை உபதேசித்தார்.போர்க்களத்தில் அர்ஜுனன் சோர்ந்துபோய் அஸ்திரத்தைக் கீழே போட்டபோது, "இப்போது நீ கடமையிலிருந்து தவறினால் எதிர்காலத்தில் உன் வம்சமே அழியும்" என்று வருமுன் காக்கும் அறிவுரைகளைக் கூறி அவனைத் தேற்றினார்.போரின் ஒவ்வொரு கட்டத்திலும் எதிரிகளின் அடுத்தகட்ட நகர்வுகளை முன்கூட்டியே கணித்து, பாண்டவர்களுக்கு வரவிருந்த பேராபத்துகளைத் தடுத்தார்.

இன்னுமொரு உதாரணம்

ஒரு கிராமத்தில் இரு விவசாயிகள் இருந்தனர். ஒருவரின் பெயர் ராமன், மற்றொருவர் கண்ணன்.

ஒரு வருடம் மழை மிக அதிகமாகப் பெய்தது. ராமனின் வயலில் இருந்த வரப்புகள் உடைந்து, தண்ணீர் புகுந்து பயிர்கள் அழியத் தொடங்கின. கவலையடைந்த ராமன், ஊரில் அனுபவமிக்க வயதான விவசாயியான சுப்பிரமணிய ஐயாவிடம் சென்றார்.

அவர் உடனே சில ஆட்களை அழைத்து வந்து, உடைந்த வரப்பு களை அடைக்கச் செய்தார். வயலில் தேங்கிய நீர் வெளியேற கால்வாய் வெட்டச் செய்தார். சில நாட்களில் பயிர்கள் காப்பாற்றப்பட்டன.

இதோடு அவர் நிற்கவில்லை.

"இந்த முறை தப்பித்துவிட்டாய். ஆனால் அடுத்த ஆண்டு மீண்டும் இதே பிரச்சினை வரும்" என்றார்.

பிறகு வயலின் சரிவை அளந்து பார்த்து, நீர் வெளியேறும் நிரந்தர வாய்க்கால் அமைக்கச் சொன்னார். வரப்புகளை உயரமாகவும் வலுவாகவும் கட்டச் சொன்னார். மழைக்காலத்திற்கு முன்பே அவற்றைச் சோதிக்கவும் அறிவுறுத்தினார்.

அடுத்த வருடம் அதைவிட அதிக மழை பெய்தது. பலரது வயல்களில் நீர் தேங்கியது. ஆனால் ராமனின் வயலில் தண்ணீர் தேங்கவில்லை. பயிரும் நன்றாக விளைந்தது.

அப்போது ராமன் சொன்னான்:

"கடந்த ஆண்டு என் வயலைக் காப்பாற்றியது ஒரு உதவி. ஆனால் இந்த ஆண்டு பிரச்சினையே வராமல் தடுத்தது அதை விடப் பெரிய உதவி."

இதுவே

"உற்றநோய் நீக்கி" – ஏற்கனவே வந்த துன்பத்தை நீக்கியது.

"உறாஅமை முற்காக்கும்" – அதே துன்பம் மீண்டும் வராதபடி முன்கூட்டியே காத்தது.

எனவே வள்ளுவர் கூறுவது,

நம்முடைய கஷ்டத்தில் வருந்துபவர் மட்டுமல்ல, அதன் காரணத்தை அறிந்து இனி அது வராத படி வழிகாட்டுபவரே உண்மையான "பெற்றியார்" என்பதாகும். அவர் நட்பையும் ஆலோசனையையும் பேணிக் கொள்ள வேண்டும். 'பேணிக் கொளல்' என்றது விரும்பித் துணையாகக் கொள்க என்ற பொருள் தருவது.

## மூன்றாவது குறள்

**அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**

**பேணித் தமராக் கொளல்**

**பதவுரை:** அரியவற்றுள்-அருமையானவற்றுள், (அருமையான பேறுகளுள்); எல்லாம்-அனைத்தும்; அரிதே-அருமையானதே; பெரியாரை-பெருமையுடையவரை; பேணி-விரும்பி, நலன்

பாராட்டி, உவப்பன செய்து; தமர்-தம்மவர்; தமக்கு நெருக்கமான உறவினர், தமக்குச் சிறந்தாராக; கொளல்-கொள்க.

பெரியாரைப் போற்றித் தமக்குச் சுற்றத்தாராக்கிக் கொள்ளுதல் பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையான தாகும் என்பது திரண்ட பொருள்.

இந்த அதிகாரத்தில் வள்ளுவர் வெறும் "பெரியாரிடம் உதவி வாங்குங்கள்" என்று சொல்லவில்லை. அதைவிட உயர்ந்த ஒரு உறவைப் பற்றிப் பேசுகிறார்.

"**அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்**"-

பெரியாரை ஒரு ஊழியராகி மட்டும் கருதக்கூடாது.இவர் நம் முடையவர் ,இவரை கைவிட்டுவிடக்கூடாது என்று நினைக்கும் படியாக ஆக்கிக் கொளல் வேண்டும்.பெரியாரை விருப்பத்துடன் ஏற்று தம் சுற்றத்தவருள் ஒருவராகக் கொள்ளுதல் அரிய செல்வங்களுள் அரியது கிடைக்கப்பெற்றது போன்றதாகும்.

முந்தைய குறளில் அப்படிப்பட்ட பெரியவர்களின் தன்மை (ஆற்றல்) என்ன என்று கூறிய வள்ளுவர், இந்தக் குறளில் அவர்களை நம்முடன் எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற உரிமையையும், அதன் மதிப்மையும் மிக ஆழமாக விளக்கு கிறார்.

உலகில் செல்வம், புகழ், பதவி, நிலம் எனப் பெறுவதற்கு அரிய பேறுகள் பல இருக்கலாம். ஆனால், அவை அனைத்தையும் விட

மிக மிக அரிய, உயர்ந்த பேறு எது தெரியுமா? அறிவு ஒழுக்கங் களில் சிறந்த பெரியோர்களைப் போற்றி, அவர்களைத் "தமக்கு நெருக்கமானவர்களாக" மாற்றித் தம்மோடு வைத்துக் கொள்வது தான்.

**தமராக் கொளல்'** என்பதன் ஆழம் கவனிக்க வேண்டும்.

பெரியோர்களை வெறும் ஆலோசகர்களாகவோ, தேவைப்படும் போது மட்டும் பயன்படுத்தும் ஊழியர்களாகவோ தூரக் தள்ளி வைக்கக் கூடாது.அவர்களை நம் குடும்பத்தில் ஒருவராக, நம் சுற்றத்தாராக (நெருங்கிய உறவினராக) மாற்றிக் கொள்ள வேண்டும்.அதாவது, நம் மீது அக்கறையோடு அவர்கள் தவறைச் சுட்டிக்காட்டி அதட்டவும், உரிமையோடு நல்வழிப்படுத்தவும் கூடிய "உரிமையை" அவர்களுக்கு நாம் வழங்க வேண்டும்.

ஒரு மருத்துவரிடம் சென்று மருந்து வாங்குவது ஒரு நிலை. ஆனால் அந்த மருத்துவர்,"உங்கள் உடல்நிலையை கவனித்துக் கொள்ளுங்கள். ஏதாவது தேவைப்பட்டால் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்"என்று உண்மையான அக்கறையுடன் கூறும் அளவிற்கு உறவு வளர்வது வேறு நிலை.

அதுபோல ஒரு ஆசிரியர், அறிஞர், அனுபவசாலி, நல்லவர் ஆகி யோருடன்,"இவர் எனக்குத் தெரிந்தவர்" என்ற உறவை விட,"இவர் நம்மவர்"என்ற உறவு உருவாக வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

இதற்கு ஒரு சிறிய சம்பவம்:

ஒரு இளைஞன். ஒரு பெரிய அறிஞரின் சொற்பொழிவுகளுக்குத் தொடர்ந்து செல்வான். பலர் போல சொற்பொழிவு கேட்டுச் சென்று விடாமல், அவர் கூறிய கருத்துகளைப் பின்பற்றி வாழ முயன்றான். அவ்வப்போது சென்று சந்தித்து ஐயங்களை கேட்டான். அறிஞரின் நலனிலும் அக்கறை காட்டினான்.

பல ஆண்டுகள் கழித்து, அந்த அறிஞர் அவரைக் கண்டதும்,"வா, எப்படி இருக்கிறாய்?"என்று அன்புடன் அழைக்கும் அளவிற்கு உறவு வளர்ந்தது.

ஒருநாள், அந்த இளைஞனுக்கு பெரிய சிக்கல் வந்தது. அப்போது அறிஞர் தாமாக முன்வந்து உதவி செய்தார்.

அந்த உதவி பணத்தால் அளவிட முடியாதது. ஏனெனில் அவர் ஒரு ஆலோசகரை மட்டுமல்ல, ஒரு வழிகாட்டியையும், பாதுகாவலரையும், அன்புடைய மூத்தவரையும் பெற்றிருந்தார்.

இதனால்தான் வள்ளுவர்,உலகில் கிடைக்கக் கடினமான செல் வங்கள் பல இருக்கலாம்; ஆனால் பெரியாரின் அன்பையும் நெருக்கத்தையும் பெற்று அவரை "நம்மவர்" ஆக்கிக் கொள்வது அவற்றையெல்லாம் விட அரிதான பேறு.

பெரியாரை வேலைக்காகப் பயன்படுத்தும் மனிதராகப் பார்க் காமல், 'இவர் நம்முடையவர்; இவரை இழக்கக் கூடாது' என்று நினைக்கும் அளவிற்கு உறவை வளர்த்துக் கொள்வதே இந்தக் குறளின் சாரம்."அதனால்தான் வள்ளுவர் "பெரியாரைச் சந்தி" என்று சொல்லவில்லை; "பேணித் தமராக் கொளல்" என்று கூறுகிறார். அந்த ஒரு சொல்லில் அன்பு, நன்றி, மதிப்பு,

நெருக்கம், நிலையான உறவு ஆகிய அனைத்தும் அடங்கி யுள்ளன.

மன்னர் கிருஷ்ணதேவராயரின் அவையில் இருந்த தெனாலி ராமன், அக்பரின் அவையில் இருந்த பீர்பால் ஆகியோரை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

அவர்கள் வெறும் அரசவை விகடகவிகளோ அல்லது ஊழியர் களோ மட்டுமல்ல. மன்னர்கள் தவறு செய்யும்போது, அதை நகைச்சுவையோடு அல்லது சாதுரியமாகச் சுட்டிக்காட்டி அரசர் களை நல்வழிப்படுத்தியவர்கள். அரசர்களும் அவர்களை வெறும் வேலைக்காரர்களாகப் பார்க்காமல், தன் குடும்பத்தில் ஒருவராக, தமக்கு நெருக்கமானவராக (தமராக) மதித்துப் போற்றினர்.

இன்னும் ஒரு உதாரணம்.

மஹாபாரதத்தில் கிருஷ்ணரின் உதவி கேட்க துரியோதனன், அர்ஜுனன் இருவரும் செல்கின்றனர்.துரியோதனன் கிருஷ்ண ரின் படைகளை கேட்கிறான்.அர்ஜுனன் கிருஷ்ணரைக் கேட் கிறான்.

துரியோதனனுக்குப் பெரியோர்களின் அறிவை விட, கிருஷ்ணரின் 'நாராயணி சேனை' என்னும் உலகப் பேராற்றல் கொண்ட படைகளின் மீதுதான் கண் இருந்தது. அவன் கிருஷ் ணரை ஒரு 'பெரியாராக' (வழிகாட்டியாக) மதிக்கவில்லை; வெறும் பலம் வாய்ந்த ஒரு சக்தியாக மட்டுமே பார்த்தான். அதனால் தான் ஆயுதம் ஏந்தாத கிருஷ்ணரை விட, அவரது படைகளே தனக்கு வேண்டும் என்று கேட்டுப் பெற்றான்.

ஆனால் அர்ஜுனனோ, "எனக்குப் படைகள் வேண்டாம், ஆயுதம் ஏந்தாத நீ மட்டும் என் பக்கம் இருந்தால் போதும்" என்று கிருஷ்ணரையே தேர்ந்தெடுத்தான். அர்ஜுனன் கிருஷ்ணரைத் தன் உயிர்த்தோழனாக, வழிகாட்டியாக, தன் குடும்பத்தில் ஒருவராக (தமராக) மனதார ஏற்றுக்கொண்டான்.

துரியோதனன் உலகிலேயே அரிய பெரிய படைகளைப் பெற் றான். ஆனால், 'பெரியாரான' கிருஷ்ணரின் துணை அவனுக்குக் கிடைக்கவில்லை. இறுதியில் பெரும்படைகள் இருந்தும் அவன் தோற்றுப் போனான்.அர்ஜுனனோ, அரிய பேறுகள் எல்லாவற் றிலும் அரிய பேறான 'பெரியாரைத் (கிருஷ்ணரை) தமராகப் பேணிக் கொண்டான்'.

ஆயுதம் ஏந்தாத அந்த ஒரே ஒரு 'பெரியார்' அர்ஜுனனின் தேரை ஓட்டியதால், பாண்டவர்கள் ஒட்டுமொத்தப் போரிலும் வென்று உலகையே ஆண்டார்கள்.

கோடிப் படைகள் (செல்வம்) இருந்தாலும், நல்வழிப்படுத்தும் 'பெரியார்' ஒருவன் நமக்குச் சுற்றமாக இல்லாவிட்டால் அனைத்தும் வீண். பெரியாரைத் துணையாகக் கொண்டவர் களுக்கே இறுதி வெற்றி .

பெரியோரின் நட்பு நமக்குக் கிடைப்பது வெறும் அதிர்ஷ்டம் அல்ல; அவர்களை மதித்து, அன்பால் நம்முடன் தக்கவைத்துக் கொள்வது நாம் செய்ய வேண்டிய ச் சிறந்த முதலீடு.

## நான்காம் குறள்

### தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்

### வன்மையுள் எல்லாம் தலை

**பதவுரை**: தம்மின்-தம்மைக்காட்டிலும், பெரியார்-பெருமையு டையவர்; தமரா-தம்மவராக, ஒழுகுதல்-நடந்து கொள்ளல்; வன்மையுள்-வலிமையுள், எல்லாம்- அனைத்தும்; தலை-முதன்மை, சிறந்தது.

தம்மைக் காட்டிலும் மிக்காராக இருக்கும் பெரியார் தனக்குச் சுற்றத்தவராக இருந்து நடந்து கொள்ளுதல் தமக்குள்ள வன் மைகள் பலவற்றுள்ளும் தலையானதாகும்.

இங்கு எது வலிமையிலும் வலிமை என்று ஆராய்கிறர். முன் னால் சொன்ன குறளில் பெரியவர்கள் துணை , பெரும் பேறு என்றவர், பேறு மட்டுமல்ல ,அது மிகுந்த வலிமையையும் தரும்.

ஒரு பக்கம் பெருமை.ஒரு பக்கம் வலிமை.

2-வது குறளில்: பெரியவர்களின் தன்மையை (வருமுன் காப்பவர்) சொன்னார்.

3-வது குறளில்: அவர்களைத் தமராகக் கொள்வது மிக உயர்ந்த பேறு (பெருமை/செல்வம்) என்றார்.

4-வது குறளில்: அந்தப் பேறு நமக்குக் கொடுக்கும் வலிமையை அலாதியாக விளக்குகிறார்.

வன்மையுள் எல்லாம் தலை.

**அல்லது இப்படியும் சொல்லலாம் .** முதலில் வள்ளுவர்,

பெரியாரைத் தேட வேண்டும் என்றார்.

துன்பத்தை நீக்கி, இனி வராமல் காக்கும் பெரியாரைத் துணை யாகக் கொள்ள வேண்டும் என்றார்.

அவர்களை வெறும் அறிமுகமாக அல்லாமல், "தமராக" ஆக்கிக் கொள்ள வேண்டும் என்றார்.இப்போது அதனால் கிடைக்கும் பயன் என்ன என்பதைச் சொல்கிறார்.

உலகில் ஒரு மனிதனுக்குப் பலவிதமான வலிமைகள் இருக் கலாம்.

ஆள் பலம் (பெரிய படை அல்லது கூட்டம்)

பண பலம் (அளவற்ற செல்வம்)

அதிகார பலம் (பதவி, சட்டம்)

உடல் பலம் (திறமை, வீரம்)

ஆனால், வள்ளுவர் சொல்கிறார்: இவை எல்லாவற்றையும் விடப் பெரிய வலிமை, நம்மை விட அறிவிலும், ஒழுக்கத்திலும், அனுபவத்திலும் பெரியவர்களை நமக்குச் சுற்றமாகக் கொண்டு, அவர்கள் வழிகாட்டுதலின்படி (ஒழுகுதல்) வாழ்வதுதான்.

ஏனென்றால், மற்ற எல்லா பலங்களும் ஒரு கட்டத்தில் அழிய லாம் அல்லது நம்மைத் தடம் மாறச் செய்யலாம். ஆனால், நம்மை விடப் பெரியவர்களின் துணை இருந்தால், நம்மிடம் இருக்கும் மற்ற பலங்கள் தவறான வழியில் சென்றுவிடாமல் காக்கப்படும்.

இதற்கும் ஒரு வரலாற்றுச் சம்பவம் சொல்லலாம்.

சந்திரகுப்தன் ஒரு சாதாரண இளைஞனாக இருந்தவன். அவனிடம் ஆரம்பத்தில் பேரரசைக் கட்டியாளும் அளவுக்குப் பண பலமோ, ஆள் பலமோ இல்லை. ஆனால், அவனுக்குத் தன்னை விடப் பெரியவரான, மிகச்சிறந்த ராஜதந்திரியான சாணக்கியரின் துணை கிடைத்தது.

சாணக்கியரைத் தன் சுற்றமாகவும், குருவாகவும் ஏற்று, அவர் சொல்லியபடி சந்திரகுப்தன் ஒழுகினான் (நடந்தான்).

நந்த வம்சத்தின் பேராற்றல் வாய்ந்த பெரும் படைகளை, சாணக் கியரின் அறிவுக் கூர்மையைக் கொண்டே சந்திரகுப்தன் வென் றான்.

இந்தியாவின் மிகப்பெரிய 'மௌரியப் பேரரசை' உருவாக்கினான்.

சந்திரகுப்தனிடம் இருந்த வாள் வீச்சை விட, அவனுக்குத் துணையாக இருந்த சாணக்கியர் என்ற 'பெரியாரின்' துணையே அவனுக்கு "வன்மையுள் எல்லாம் தலை" (தலைசிறந்த வலிமை) ஆயிற்று.

ஒரு சம்பவம்:

ஒரு வணிகர் புதிதாக தொழில் தொடங்கினார். அவரிடம் பணமும் இருந்தது, உழைப்பும் இருந்தது. ஆனால் அனுபவம் குறைவு.அவருக்கு வயதான ஒரு வணிகர் நண்பராக இருந்தார். முக்கிய முடிவுகள் எடுக்கும் போதெல்லாம் அவரிடம் ஆலோ சனை கேட்டார்.

ஒருமுறை ஒரு பெரிய முதலீட்டு வாய்ப்பு வந்தது. எல் லோரும்,"இது பெரிய லாபம் தரும்"என்று சொன்னார்கள். ஆனால் அந்த மூத்தவர் மட்டும்,"அவசரப்படாதே. இதில் மறைந்த ஆபத்து இருக்கிறது" என்று எச்சரித்தார்.

இளைஞன் அவரது வார்த்தையை ஏற்றுக் கொண்டான். சில மாதங்களில் அந்தத் திட்டம் தோல்வியடைந்து பலர் நஷ்ட மடைந்தனர்.அப்போது அவன் உணர்ந்தான்:"என் பணம் என்னைக் காப்பாற்றவில்லை; என்னைவிட அனுபவம் மிக்கவர் என்னோடு இருந்ததே என்னைக் காப்பாற்றியது."

பெரியாரின் நட்பு ஒரு அலங்காரம் அல்ல; அது ஒரு அரிய பேறு. அது மட்டுமல்ல; வாழ்க்கைப் போராட்டங்களில் நம்மைக் காக்கும் மிகப் பெரிய வலிமையும் ஆகும்.

**வள்ளுவர் இங்கு மிகவும் நுட்பமாக ஒரு உண்மையைச் சொல்கிறார்:**

தனியாக வலிமை பெற முயல்வதைவிட, தன்னைவிட உயர்ந் தவர்களைத் தமராக ஆக்கிக் கொள்வதே உயர்ந்த வலிமை.

ஏனெனில் ஒருவனுடைய தனிப்பட்ட ஆற்றலுக்கு எல்லை உண்டு; ஆனால் அவனுடன் நிற்கும் பெரியாரின் அறிவும் அனுபவமும் சேரும்போது, அவன் வலிமை பல மடங்கு பெருகுகிறது. இதனால்தான் "வன்மையுள் எல்லாம் தலை" என்று வள்ளுவர் மிகத் துணிவாகக் கூறுகிறார்.

## ஐந்தாம் குறள்

**சூழ்வார் கண் ஆக ஒழுகலான் மன்னவன்**

**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்**

பதவுரை: சூழ்வார்-சூழ்ந்து இருப்பவர்; கண்-விழி; ஆக-ஆகும்படி; ஒழுகலான்-நடந்து கொள்ளுதலால்; மன்னவன்-வேந்தன்; சூழ்வாரை-பெரியாரை; சூழ்ந்து-ஆராய்ந்து; கொளல்-கொள்க.

நமக்கு இரண்டு கண்கள் தான்.பார்க்கும் சக்தி குறைவுதான். நம்மைச் சுற்றி நமக்காக இருக்கும் அனுபவமிக்க கண்களும் நமக்கானவைதானே. சூழ்வார்- நம்மைச் சூழ்ந்திருக்கும் பெரியார் என்று பொருள்.

நமக்குக் கண்கள் உள்ளன. ஆனால் எல்லாவற்றையும் பார்க்க முடியாது.

கண் முன் இருப்பதைப் பார்க்கும்.

எதிர்காலத்தைப் பார்க்காது.

மறைந்துள்ள ஆபத்தைக் காணாது.

அனுபவமின்மையால் தவறான மதிப்பீடு செய்யலாம்.

அதனால் தான் அனுபவமிக்க பெரியார்கள் நமக்குக் "மேலதிகக் கண்கள்" ஆகிறார்கள்.

அதனால், "சூழ்வார் கண் ஆக ஒழுகலான்" – அதாவது, நாட்டைப் பற்றியும், மக்களின் தேவைகளைப் பற்றியும், எதிர்காலப் பிரச் சினைகளைப் பற்றியும் ஆராய்ந்து சொல்லக்கூடிய தகுதியுடைய பெரியோர்களையே (அமைச்சர்கள் / சான்றோர்கள்) தன் கண் களாகக் கொண்டு மன்னன் செயல்பட வேண்டும்.

ஏனென்றால்,

மன்னனின் சொந்தக் கண்கள் விருப்ப வெறுப்புகளுக்கு ஆட் படலாம்.

ஆனால், சூழ்ந்திருக்கும் பெரியோர்களின் அறிவுக் கண்கள் உண்மையை மட்டுமே பார்க்கும்.

எனவேதான், வள்ளுவர் "சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்" என்கிறார். அப்படிப்பட்ட அறிவுக்கண்ணாக விளங்கக்கூடிய பெரி யோர்களை, மன்னன் பலமுறை ஆராய்ந்து, தரம் பார்த்து, எப்படியாவது தன் துணையாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு புதிய மாவட்ட ஆட்சியர் பொறுப்பேற்றார். மிகுந்த கல்வியும் திறமையும் உடையவர். ஆனால் அந்த மாவட்டத்தின் நிலை மைகள் அவருக்குப் புதிது.ஒருநாள் ஒரு பெரிய திட்டத்தை உடனே நிறைவேற்ற முடிவு செய்தார்.அப்போது அவருடன் இருந்த வயதான அதிகாரி ஒருவர்,"அய்யா, காகிதத்தில் இது

சரியாகத் தெரிகிறது. ஆனால் இந்தப் பகுதியில் மழைக் காலத்தில் தண்ணீர் தேங்கும். இப்போது செய்தால் பிரச்சினை வரும்."என்று எச்சரித்தார்.

ஆட்சியர் முதலில் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பின்னர் ஆராய்ந்தபோது அந்த அதிகாரி சொன்னது உண்மை என்று தெரிந்தது.அப்போது அவர் கூறினார்:

"நான் என் கண்களால் பார்த்தது ஒன்று. நீங்கள் உங்கள் அனுபவக் கண்களால் பார்த்தது இன்னொன்று."

இதுவே "**சூழ்வார் கண் ஆக**" என்பதன் பொருள்.

இங்கு வள்ளுவர் இன்னொரு நுட்பமான கருத்தையும் சொல் கிறார்.முந்தைய குறளில்,"தம்மின் பெரியார் தமரா ஒழுகு தல்"என்று பெரியார் நமக்கு வலிமை என்றார்.

இந்தக் குறளில்,"சூழ்வார் கண் ஆக"என்று பெரியார் நமக்கு பார்வை என்றும் சொல்கிறார்.

அதாவது பெரியார்:

1.துன்பத்தை நீக்குவார்.

2.எதிர்காலத் துன்பத்தைத் தடுப்பார்.

3.நமக்கு வலிமையாக இருப்பார்.

4.நமக்குக் கண்களாகவும் இருப்பார்.

எனவே "சூழ்வார்" என்ற சொல்லை வெறும் "ஆலோசகர்கள்" என்று மட்டும் கொள்ளாமல்,"நம்மைச் சுற்றி இருந்து, நாம் காணா ததைப் பார்த்து, நாம் நினைக்காததை நினைத்து, நமக்காக அக் கறையுடன் அறிவுரை கூறும் பெரியார்"என்று எடுத்துக் கொண் டால் குறளின் பொருள் முழுமையாக வெளிப்படும்.

## ஆறாம் குறள்

**தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்**

**செற்றார் செயக்கிடந்தது இல்**

**பதவுரை**: தக்கார்-தகுதியுடையர்; இனத்தனாய்-சேர்க்கையுடைய வனாய்; தான்-தான்; ஒழுக-நடந்துகொள்ள; வல்லானை-திறமை யுடையவனை .

தகுதி வாய்ந்த பெரியோரினத்தைச் சேர்ந்தவனாய்த் தானும் அரசியல் அறிந்து ஒழுக வல்லவனுக்குப் பகைவர்கள் செய்யக் கிடக்கும் கேடு ஒன்றும் இல்லை என்பது திரண்ட பொருள்.

இங்கே இரண்டு விஷயங்கள் முக்கியம்.ஒன்று தக்கரோடு சேர் வது. இரண்டாவது அவர்களோடு இணைந்த செயலை திறனோடு செய்வது.தக்காரோடு சேர்வதால் அறிவும் திறனும் வந்துவிடும்.

**1. தக்கார் இனத்தனாய்**

வெறும் பெரியாரை அறிந்திருப்பது போதாது.

தக்கவர் யார்? அறிவுடையவர்

அனுபவமுடையவர்

ஒழுக்கமுடையவர்

தொலைநோக்குப் பார்வையுடையவர்

அவர்களுடைய இனத்தனாய் இருக்க வேண்டும். அதாவது அவர் களுடைய வட்டத்தில், நட்பில், வழிகாட்டுதலில், சேர்க்கையில் இருக்க வேண்டும்.

**2. தானொழுக வல்லானை**

இதுவே மிக முக்கியம். பெரியாரோடு பழகினால் மட்டும் போதாது. அவர்களுடைய அறிவுரையைக் கேட்க வேண்டும். அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.தானும் திறமையாக நடக்க வேண்டும்.

ஒரு நல்ல ஆசிரியரிடம் படித்த மாணவன் படிக்காவிட்டால் பயன் இல்லை. ஒரு சிறந்த மருத்துவரிடம் ஆலோசனை பெற்ற நோயாளி மருந்து சாப்பிடாவிட்டால் குணமில்லை.

அதுபோல,

தக்காரின் சேர்க்கை + தன்னுடைய சரியான செயல்பாடு

இரண்டும் சேர்ந்தால்தான் வெற்றி. இதில் ஒரு ஆழமான உண்மை இருக்கிறது. நாம் யாருடன் அதிக நேரம் செலவிடு கிறோமோ, அவர்களின் சிந்தனை நம்மிடம் மெதுவாகப் பரவுகிறது.

ஒரு இளைஞன் பத்து ஆண்டுகள் அனுபவமிக்க நல்ல வணிகர் களோடு பழகினால் சந்தையைப் புரிந்து கொள்வான். ஆபத்து களை முன்கூட்டியே உணர்வான் .முடிவெடுக்கும் முதிர்ச்சி பெறுவான்.

இவை புத்தகத்தில் மட்டும் கிடைக்காத அனுபவ அறிவுகள்.

ஆனால் வள்ளுவர் இன்னும் ஒரு படி மேலே செல்கிறார். அவர்,

"தக்காரோடு சேர்ந்தவன்" என்று மட்டும் சொல்லவில்லை;

"தானொழுக வல்லானை" என்று சொல்கிறார்.

ஏனெனில் சிலர் நல்லவர்களோடு இருப்பார்கள்; ஆனால் கற்றுக் கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அந்தச் சேர்க்கை யால் முழுப் பயன் கிடையாது.

ஒரு சிறிய உதாரணம்

ஒரு இளவரசன் அனுபவமிக்க அமைச்சர்களுடன் இருந்தான். அவர்கள் எச்சரித்ததை கவனமாகக் கேட்டு, ஆராய்ந்து, அதன்படி செயல்பட்டான்.

மற்றொரு இளவரசனும் அதே அமைச்சர்களோடு இருந்தான். ஆனால் தனது பிடிவாதத்திலேயே நடந்தான்.

முதல் இளவரசனை பகைவர்கள் வெல்ல முடியவில்லை. இரண் டாவது இளவரசன் விரைவில் சிக்கலில் மாட்டிக் கொண்டான்.

வேறுபாடு அமைச்சர்களில் இல்லை; "தானொழுக வல்லானை" என்ற தகுதியில் இருந்தது.

தக்கவர்களின் சேர்க்கை ஒருவருக்கு அறிவின் மூலதனத்தைத் தருகிறது; அந்த அறிவைப் பயன்படுத்தும் திறமை அவனை வெல்ல முடியாதவனாக ஆக்குகிறது.

இதனால்தான் வள்ளுவர்,"**செற்றார் செயக்கிடந்தது இல்**" என் கிறார். அதாவது, தக்க பெரியாரின் வழிகாட்டுதலோடும், தானும் அறிவோடு நடக்கும் திறனோடும் இருப்பவனைப் பகைவர்கள் கெடுக்க ஏதுவான வாய்ப்பே கிடைக்காது. பகைவர்கள் சூழ்ச்சி செய்தாலும், இவனுடைய அறிவுக் கூர்மையும், சுற்றியுள்ள பெரியவர்களின் வழிகாட்டுதலும் அதை முறியடித்து விடும்.

## குறள் 7

**இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே**

**கெடுக்கும் தகைமை யவர்**

**பதவுரை**: இடிக்கும்-நெருக்கிச் சொல்லும்; துணையாரை-துணையாந் தன்மையுடையவரை; ஆள்வாரை-ஆள்கின்றவரை, உடையவரை; யாரே-எவரே, யார்தான்; கெடுக்கும்-அழிக்கும்; தகைமையவர்-பெருமையுடையவர்.

கடிந்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணை கொண்டு நடப்பவரைக் கெடுக்கும் ஆற்றல் உடையவர் யார் இருக்கின் றனர்? என்பது திரண்ட பொருள்.

பெரியார் என்று ஏன் சொன்னார்? அந்த வார்த்தையிலேயே தவறு செய்தால் கண்டிக்கும் உரிமை வந்து விடுகிறது.

இதற்கு முந்தைய குறட்பாக்களிலும், சுற்றத்தார் தமர் என்ற வார்த்தை பயன்படுத்தி இருப்பதால், நமக்கு வேண்டியவராகவும் இருக்கிறார். நம்முடைய நல்வாழ்க்கைக்கு துணையாக இருப்ப வராகவும் இருக்கிறார். அதனால் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டிக்கக் கூடிய உரிமை உள்ளவராகவும் இருக்கிறார்.

இந்தக் குறளில் வள்ளுவர் "இடிக்கும் துணையார்" என்று மட்டும் சொல்லவில்லை; "இடிக்கும் துணையாரை ஆள்வாரை" என்று சொல்கிறார். அதாவது, தவறு செய்தால் அஞ்சாமல் கண்டித்து அறிவுரை கூறக்கூடியவர்களைத் தமக்குத் துணையாகக் கொண்டிருப்பவன் பற்றி பேசுகிறார். சும்மா 'ஆமா சாமி' போடு பவர்கள் துணையாக இருக்க முடியாது; தவறை சுட்டிக்காட்டி இடித்துரைப்பவரே உண்மையான பெரியார்.

"பெரியார்" என்ற சொல்லுக்கு இங்கு வெறும் வயது அல்லது பதவி என்ற பொருள் இல்லை. அறிவிலும், அனுபவத்திலும், அறத்திலும் உயர்ந்தவர் என்பதே பொருள். அவர்களுக்குத் தகுதி இருப்பதால் அவர்களது கண்டிப்புக்கும் மதிப்பு உண்டு.

இந்த அதிகாரத்தின் முந்தைய குறள்களில் "தமர்", "சுற்றத்தார்", "இனம்" போன்ற சொற்கள் வருகின்றன. அவை வெறும் வெளிப் புற ஆலோசகர்களைக் குறிக்கவில்லை. நம்மீது அக்கறை கொண்டவர்களையும் குறிக்கின்றன. அக்கறை இல்லாதவன் கண்டித்தால் அது அவமதிப்பாகத் தோன்றும்; அக்கறை உள்ள வன் கண்டித்தால் அது திருத்தும் முயற்சியாகத் தோன்றும்.

என்னைப் பாராட்டுபவன் நண்பன் மட்டுமல்ல;என் தவறைச் சுட்டிக்காட்டுபவனும் நண்பனே" என்ற கருத்து இக்குறளின் உள்ளார்ந்த பொருளாகிறது.

அந்நியன் ஒருவன் நம்மைத் திட்டினால் நாம் கோபப்படுவோம், அதை ஏற்க மாட்டோம்.ஆனால், நம் நலம் விரும்பும் ஒரு 'சுற்றமாகவோ' அல்லது நமக்கு வேண்டிய 'தமராகவோ' இருக்கும் போதுதான், அவர்கள் கடிந்து சொன்னாலும் அதில் உள்ள அக்கறையை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

மேலும், "**இடிக்கும்**" என்ற சொல்லும் கவனிக்கத்தக்கது. வள்ளுவர் "சொல்லும்", "அறிவுறுத்தும்" என்று கூறாமல் "இடிக்கும்" என்று கூறுகிறார். சில தவறுகள் மென்மையாகச் சொன்னால் திருந்தாது; அப்போது உறுதியாகக் கண்டிக்க வேண்டியிருக்கும். அந்தக் கண்டிப்பை ஏற்றுக்கொள்ளும் பண்பும் ஆள்பவனுக்கு வேண்டும்.

இன்றைய காலத்தில் கூட, எப்போதும் பாராட்டிக்கொண்டே இருப்பவர்களை விட, தேவையான நேரத்தில் "இது தவறு" என்று சொல்லத் துணியும் ஒரே ஒரு நலன் விரும்பி இருப்பதே பெரிய பாதுகாப்பு என்று வள்ளுவர் உணர்த்துகிறார்.

உரிமையோடு தவறைச் சுட்டிக்காட்டும் (இடிக்கும்) ஒரு நல்ல துணையைத் (பெரியாரைத்) தன் பக்கத்தில் வைத்திருப்பவரை, இந்த உலகத்தில் எந்தப் பகைவராலும், எந்தச் சூழ்நிலையிலும் 'கெடுக்கவே முடியாது' என்ற இக்குறளின் திரண்ட கருத்து.

இதற்கு உதாரணமாக இராமாயணத்தில் வீடணனைச் சொல் லலாம் .

வீடணனைப் பற்றிப் பூரணமாகத் தெரிந்து கொள்ள வேண்டு மென்றால் யுத்தகாண்டத்தை அணு அணுவாகப் படிக்க வேண்டும்.இராவணனின் செய்கையை உள்ளது உள்ளபடி விமர்சித்துப் பேசியவர்கள் இருவர்.

ஒருவன் கும்பகர்ணன்.

இன்னொருவன் வீடணன்.

வீடணன் மிகச் சிறந்த அறிஞன். அரசியல் மதி நுட்பம் நிறைந் தவன். தர்க்க மீமாம்ச சாஸ்திர நிபுணன் என்பதையெல்லாம் வீடணன் பேச்சிலிருந்து நாம் தெரிந்து கொள்கிறோம்.மன்னன் விரும்புவதைச் செய்வதும் சொல்வதும் அமைச்சர்கள் வேலையல்ல!

எது மன்னனை மற்றவர்கள் விரும்பிப் போற்றும்படிச் செய் யுமோ, அதனைச் சொல்ல வேண்டும்!அரசன் அப்போ தைக்கு ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் நல்லது கெட்டது - இரண் டையும் தீர்க்கமாகச் சொல்லி வழிநடத்துவது மந்திரியின் கடமை!

மன்னனின் அழிவுக்குக் காரணமாகி, தானும் சேர்ந்து அவனோடு அழிவது அல்ல அமைச்சனின் பணி!

உள்ளது உள்ளபடி சொல்ல வேண்டும்.

வீடணன் அப்படித்தான் சொன்னான்.

''நான் பெரிய அறிஞன் இல்லை என்று நீ எண்ணலாம். ஆனால் ஒரு முறைக்கு நூறு முறை ஆலோசித்துச் சொல்லும் என் சொற்களின் தன்மையை உன்னால் ஆராய்ந்து பார்த்து எது சரி என்று தீர்மானித்துக் கொள்ள முடியும்!"

"இராமனை இவர்கள் கிள்ளுக் கீரையாக நினைக்கிறார்கள். எதிரி யின் பலத்தை அறியாமல் போர் என்று போவது தவறு! இராமன் முன்னெச்சரிக்கையோடு செயல் படும் ஆற்றல் மிக்கவன். யாராலும் கடக்க முடியாத கடலை சர்வசாதார ணமாகத் தாண்டி வந்து இலங்கையை முற்றிலும் அழித்து விட்டுச் சென்ற ஒரே ஒரு குரங்கு - ஹனுமான் -அவன் செய்த காரியங்கள் வியப் பளிக்க வில்லையா?"

"இன்னொன்று! இலங்கையை குரங்கு சுட்டது என்று எண்ணு வதே பிழை! பின் யார் சுட்டது என்று கேட்க லாம். சானகி என்ற பெண்ணை கடத்திக்கொண்டு வந்து வைத்திருக்கிறாயே, அவள் கற்பின் திறன் சுட்டது!"

**கோநகர் முழுவதும் நினது கொற்றமும்**

**சானகி எனும் பெயர் உலகின் தம்மனை**

**ஆனவள் கற்பினால் வெந்தது அல்லது ஓர்**

**வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ**!

அண்ணா ,மிகப் பெரிய வரங்களை நான்முகலிடம் பெற்றாய்! ஆனால், உன்னால் இழிவாகப் பேசப்பட்ட தர்களை வெல்லும் வரத்தைப் பெறவில்லை. இராமன், மனிதனாக அல்லவா வந்திருக்கிறான்!"

1. இராமன் மனிதன்!

2.இராமன் வீரன்! தனி ஆளாக பல்லாயிரம் அரக்கர்களைக் கொன்றவன்.

3. உன்னை வென்றவன் வாலி. வாலியை வென்றவன் இராமன்.

4. உன்னை வென்றவன் கார்த்தவீரியார்ச்சுனன். கார்த்தவீரியார்ச் சுனனை வென்றவன் பரசுராமன், அந்தப் பரசுராமனை வென்றவன் இராமன்.

"எனவே, இராவணா! எதிரிகள் பலத்தைச் சாதார ணமாக எடை போட்டு விடக்கூடாது."இராவணா! நீ தவறுக்கு மேல் தவறு செய்ய தேவர் களின் முகங்கள் பிரகாசமடைகின்றன. உன் அழிவை தேவர்கள் விரும்புவதால் உன் தவறைப் பார்த்து மகிழ் கின்றனர்."

"இந்த இலங்கையில் சொல்ல இயலாத தீ நிமித் தங்கள் தோன்று கின்றனவே! இதன் காரணத்தை யாராவது உனக்குச் சொன் னார்களா?"

இப்படிச் சொல்லிவிட்டு, "அண்ணா/ கோபித்துக் கொள்ளாதே / பிரகஸ்தன் முதலியவர்கள் உன் மனம் கோணாமல் நடக்கி றவர்கள்/ அதனால் நல்லது சொல்லத் தயங்குகின்றனர். நான்

உன் தம்பி! அப்படி இருக்க முடியாது. நீ செய்ய வேண்டிய பரிகாரம் இனி ஒன்றுதான்!பகை வேண்டாம்.

இவ்வாறு சொல்லிய விடணனுக்கு கம்பன் சூட்டிய அடை மொழி என்ன தெரியுமா? அறிஞரில் மிக்கான்.அவர்கள் துணையிருந்தும் பயன்படுத்தி கொள்ளாததால் இராவணன் அழிந்தான்.

## குறள் 8

**இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**

**கெடுப்பார் இலானும் கெடும்.**

**பதவுரை**: இடிப்பாரை-கடிந்துரைப்பாரை, கழறுதற்கு உரியவரை; இல்லாத-இல்லாத; ஏமரா-காவலற்ற, பாதுகாப்பு இல்லாத, ஏமம் மருவாத; மன்னன்-நாட்டுத் தலைவன்; கெடுப்பார்-கேடு விளைப்பவர்; இலானும்-இல்லையாயினும்; கெடும்-அழியும்.

தன்னை இடித்துக்கூறித் திருத்தவல்ல பெரியவர்களின் துணை இல்லாத, பாதுகாவலற்ற மன்னன், பகையாய்த் தன்னைக் கெடுப்பார் யாரும் இல்லாவிட்டாலும் தானே கெட்டழிவான்.

பெரியாரை கண் என்றார்.கவசம் என்றார்.பேறு என்றார்.வலிமை என்றார்.ஆனால்,தவறு செய்யும்போது கண்டிக்க ஆளில்லபோது, இது அத்தனையும் பயன்படாதே!பிறகு தனியாக வந்து ஒருவன் கெடுக்க வேண்டுமா என்ன?தானே கெட்டழிவானே என்கிறார்.

முந்தைய குறளில்,"இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே கெடுக்கும்"என்றார்.

இப்போது அதற்கு எதிர்மறையான நிலையைச் சொல்கிறார்:"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்" என்கிறார்.இங்கு "ஏமரா" என்ற சொல் மிகவும் ஆழமானது. வெளியில் படை இருக்கலாம்; செல்வம் இருக்கலாம்; நண்பர்கள் இருக்கலாம்; ஆனால் தவறைச் சுட்டிக்காட்ட யாரும் இல்லையென்றால் அவன் உண்மையில் பாதுகாப்பற்றவன்.

ஏனெனில் மனிதனை முதலில் அழிப்பது வெளிப்பகை அல்ல; தன் தவறை உணர முடியாத நிலைதான். அந்த நிலை வந்து விட்டால், பகைவர் தேவைப்படமாட்டார்.அதனால்தான் வள்ளுவர் மிகக் கூர்மையாக, "கெடுப்பார் இலானும் கெடும்" என்றார்.

"கெடுப்பார் இருந்தால் கெடும்" என்று சொல்லவில்லை. "கெடுப்பார் இல்லாவிட்டாலும் கெடும்" என்கிறார். காரணம், தவறைத் திருத்தும் குரல் இல்லாத இடத்தில் தவறே பகைவனாக மாறி விடுகிறது.

இலங்கையை ஆண்ட இராவணன் அழிந்தது அவனை நெறிப் படுத்தும் 'இடிக்குநர்' அவன் அவையில் இல்லாததால்தான் என்று சீதையின் வாயிலாகக் கம்பர் உணர்த்துவார்:

**கடிக்கும்வல் லரவும் கேட்கும்**

**மந்திரம் களிக்கின் றோயை**

**அடுக்கும்ஈ தடாதென்று ஆன்ற**

**ஏதுவோடு அறிவு காட்டி**

**இடிக்குநர் இல்லை; உள்ளார்**

**எண்ணிய தெண்ணி உன்னை**

**முடிக்குநர் என்ற போது**

**முடிவின்றி முடிவ துண்டோ?** (கம்பராமாயணம்: சுந்தர காண்டம்: காட்சிப் படலம்: 5311)

"இராவணா! கடித்தால் மரணத்தை விளைவிக்கும் கொடிய நச்சுப் பாம்புகூட, தகுந்த மந்திரத்தை ஓதினால் கட்டுப்பட்டு அடங்கிவிடும். ஆனால், நீயோ காமப் போதையில் மயங்கிக் கிடக்கிறாய்.

'நீ செய்வது தர்மத்திற்கு அடுக்குமா? இது அடுக் குவது அல்ல!' என்று தக்க காரணங்களோடு (ஆன்ற ஏது வோடு) அறிவை ஊட்டி, உன்னை இடித்துரைத்து நல்வழிப் படுத்தும் பெரியோர்கள் (இடிக்குநர்) உன் அவையில் இல்லை.

ஆனால், உன்னைச் சுற்றி இருப்பவர்களோ (அமைச்சர்களும், புலவர்களும்), நீ என்ன நினைக்கிறாயோ அதையே ஆமோ தித்து, உனக்கு ஜால்ரா தட்டி, உன்னை அழிவுப் பாதைக்குக் கொண்டு செலுத்துபவர்களாகவே (முடிக்குநர்) இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் இருக்கும் உனக்கு, முடிவு (அழிவு) வராமல் வேறு என்ன வரும்?"

இராவணனின் அவையில் மாரீசன், கும்பகருணன், விபீ ஷணன் போன்றோர் ஆரம்பத்தில் சில அறிவுரைகளைக் கூற முயன்றனர். விபீஷணன் மிகத் தெளிவாக, "அடுத்தவன்

மனைவியைக் கவர்ந்தது தவறு, சீதையை விட்டுவிடு" என்று இடித்துரைத்தான். ஆனால், இராவணன் தன் தற்பெருமையால் அவனைக் காலால் உதைத்து அவையை விட்டுத் துரத் தினான்.

அதன் பிறகு, அவனுடைய அவையில் எஞ்சியிருந்தவர்கள் இராவணனின் பலத்தைப் புகழ்ந்து பேசி, அவனைப் போருக்குத் தூண்டிய "முடிக்குநராக" (அழிப்பவராக) மாறிப் போனார்கள்.

இராமனின் அம்புகளால் இராவணன் மடிவதற்கு முன்பே, தன் தவறைச் சுட்டிக்காட்டிய விபீஷணனை அவன் துரத்திய போதே அவனது 'ஏமம்' (பாதுகாப்பு) நீங்கிவிட்டது அவனது அழிவும் தொடங்கிவிட்டது.

இது மன்னனுக்கு மட்டுமல்ல. குடும்பத் தலைவன், ஆசிரியர், எழுத்தாளர், ஆன்மீகவாதி, நிர்வாகி என யாராக இருந்தாலும் பொருந்தும். எப்போதும் பாராட்டும் கூட்டம் சூழ்ந்திருப்பது வளர்ச்சியின் அறிகுறி அல்ல; தேவையான நேரத்தில்,"இது சரியல்ல" என்று சொல்லத் துணியும் ஒருவர் அருகில் இருப்பதே உண்மையான பாதுகாப்பு.

அதனால் இந்தக் குறள், "பகைவனை வெல்வது எப்படி?" என்று சொல்லவில்லை; "தன்னைத்தானே கெடுத்துக்கொள்ளாமல் இருப்பது எப்படி?" என்பதையே சொல்லுகிறது. அதற்கான முதல் நிபந்தனை – இடித்துரைக்கும் பெரியாரின் துணை.

அன்று வள்ளுவர் சொன்னது அரசர்களுக்கு மட்டுமல்ல, இன்று நமக்கும் இது மிகக் கச்சிதமாகப் பொருந்தும்:

ஒரு நிறுவனத்தின் மேலாளரோ அல்லது நாட்டின் தலைவரோ, தங்களை எப்போதும் பாராட்டுபவர்களை மட்டுமே அருகில் வைத்துக்கொண்டால், அவர்கள் எடுக்கும் தவறான முடிவுகள் ஒட்டுமொத்த அமைப்பையும் வீழ்த்திவிடும்.

நாம் தவறு செய்யும்போது நம்மைக் கண்டிக்காமல், எல்லாவற் றிற்கும் தலையசைக்கும் நண்பர்களை விட, "நீ செய்வது தவறு" என்று முகத்தில் அடித்தாற்போல் சொல்லும் ஒரு நல்நண்பன் கிடைப்பது பெரும் பேறு.

## குறள் 9

**முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்**

**சார்பிலார்க்கு இல்லை நிலை**

**பதவுரை:** முதல்-முதற்பொருள், முன்பணம் அதாவது மூலதனம்; இலார்க்கு-இல்லாதவர்க்கு; ஊதியம்-வருவாய், இலாபம், பேறு, ஆக்கம்; இல்லை-இல்லை; மதலை-முட்டுத் தூண், பாரந்தாங்கும் தூண், உத்தரம், வன்மையுடையது; ஆம்-ஆகும்; சார்பு-துணை; இலார்க்கு-இல்லாதவர்க்கு; இல்லை-இல்லை; நிலை-நிலைபேறு, சலியாது நிற்றல்.

முதல் இடாதவர்களுக்கு ஊதியம் இல்லை; தம்மைத் தாங்கும் துணையில்லாதவர்க்கு நல்ல நிலை இல்லை என்பது இக் குறட்கருத்து.

இங்கே பெரியார் துணையை வணிகத்தோடு ஒப்பிடுகிறார். என்ன காரணம்? வணிகம் என்பது ஒரே மாதிரியாக இருக்காத்து.. ஓஹோ என்று இருக்கும். எதிர்பாராத சரிவுகளும் வரும். அந்த நேரத்தில் கை முதல் உள்ளவன் அந்த சரிவைச் சமாளித் துக்கொண்டு மேலே வந்து விடுவான் . அதுபோல பெரியார் என்கிற கை முதல் இருக்கக் கூடியவன், தாங்க முடியாத சோதனைகள் வருகின்ற காலத்திலும்,பெரியாரால் தாங்கப் பட்டு மேலே வந்து விடுவான். வணிகனுக்கு முதல் போல பெரியாரின் இணக்கமும் நட்பும் ஒருவரைத் தூக்கி நிறுத்தும்.

ஒரு தொழிலைத் தொடங்கவும், அதனைத் தொய்வின்றி நடத்தவும் 'கைமுதல்' (மூலதனம்) எவ்வளவு முக்கியமோ, அதைப்போல வாழ்க்கைப் பயணத்திற்கு 'பெரியோரின் துணை' முக்கியம்.

மூலதனம் இல்லாத வணிகன் எப்படி லாபம் ஈட்ட முடியாதோ, அதேபோலத் தனக்கு நல்ல வழிகாட்டும் பெரியோர்களின் துணை இல்லாதவன் வாழ்க்கையில் நிலையான இடத்தை அடைய முடியாது.

மதலையாம் சார்பிலார்க்கு இல்லை நிலை.

'மதலை' என்றால் கூரையைத் தாங்கி நிற்கும் முட்டுத்தூண் என்று பொருள்.

வணிகத்தில் திடீரென ஏற்படும் நஷ்டங்களைச் சமாளிக்கக் கைமுதல் எப்படி ஒரு தூணாக நின்று வணிகனைக் காப்பாற் றுகிறதோ, அதேபோல வாழ்க்கையில் சோதனைகளும் துன்பங்

களும் வரும்போது பெரியோர்களின் அறிவுரைகளும், அவர் களின் நட்பும் நம்மை வீழ்ந்துவிடாமல் தாங்கிப் பிடிக்கும் முட்டுத்தூணாகச் செயல்படுகின்றன.

வாழ்வில் துன்பம் வரும்,

தோல்வி வரும்,

மனச்சோர்வு வரும்,

தவறான முடிவுகள் எடுக்கும் சூழல் வரும்,

பகைவர்களின் தாக்குதலும் வரலாம்.

அந்த நேரத்தில் அறிவும் அனுபவமும் கொண்ட பெரியார் அருகில் இருந்தால், அவர்கள் ஒரு "மதலை" (பாரந்தாங்கும் தூண்) போலத் தாங்கி நிற்பார்கள்.

வள்ளுவர் "சார்பு" என்று கூறுகிறார். சார்பு என்பது வெறும் அறிமுகமோ பழக்கமோ அல்ல. சாய்ந்து நிற்கக்கூடிய ஆதாரம். வீட்டின் கூரையைத் தாங்கும் தூண் போல, வாழ்க்கையின் பாரத்தைத் தாங்கும் உறவு.

கைமுதலைக் கொண்டு ஒரு வணிகன் தன் தொழிலைப் பல மடங்கு பெருக்குகிறான்.

அதுபோல, சான்றோர்களின் இணக்கத்தைக் கொண்டு ஒருவன் தன் அறிவையும், பண்பையும், சமூகத்தில் தன் நிலையையும் உயர்த்திக் கொள்கிறான். பெரியோர்களின் துணை இருக்கும்

போது தவறான முடிவுகள் தவிர்க்கப்பட்டு, வாழ்க் கையில் 'ஊதியம்' எனப்படும் நற்பேறுகள் தானாகக் கிட்டும்.

ஒரு வணிகனுக்குப் பண முதலீடு எவ்வளவு அவசியமோ, ஒரு மனிதனின் வாழ்க்கைக்குப் 'பெரியோர்களின் அறிவு முதலீடு' அவ்வளவு அவசியம். தூணில்லாத கட்டிடம் சரிவது போல, துணையில்லாத வாழ்வும் சரிந்துவிடும் என்ற வள்ளுவரின் பொருளியல் கலந்த வாழ்வியல் பார்வை அன்றும், இன்றும், என்றும் பொருந்தக்கூடியது!

இலாபம் ஈட்டுவதற்கு வணிகனுக்குக் கைமுதல் தேவை; நிலைபெற்று வாழ்வதற்கு மனிதனுக்குப் பெரியார் துணை தேவை. இதனால்தான் வள்ளுவர் "முதல்" மற்றும் "சார்பு" என்ற இரண்டு சொற்களையும் இணைத்து, பெரியாரின் நட்பை சாதாரண உறவாக அல்லாமல் வாழ்க்கையின் முதலீடு என்று உயர்த்திக் காட்டுகிறார்.

## குறள் 10

**பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**

**நல்லார் தொடர்கை விடல்**

**பதவுரை**: பல்லார்-பலர், கணக்கற்றவர்; பகை-பகைமை; கொளலின்-கொள்ளுதலைவிட, அடைவதைவிட; பத்து-பதிற்று; அடுத்த-மடங்கான; தீமைத்தே-தீங்குடையதே; நல்லார்-நற்பண்புகள் நிறைந்தவர், பெரியார்; தொடர்-தொடர்பு, நட்பு, உறவு; கைவிடல்-முற்றிலும் நீக்கிவிடல், ஏற்காதொழிதல்.

தமக்குத் துணைவராக உள்ள பெரியவர்களுடைய ஆதரவு விட்டுப் போகும்படி தவறி நடந்து கொள்வது பலபேரைப் பகைத்துக் கொள்வதைவிடப் பலமடங்கு தீமை உண்டாக் கக்கூடியது.

பகை என்பது அனேகமாக இல்லாமல் வாழ முடியாது.

**உட்பகை** – காமம், கோபம், பேராசை, அகந்தை, பொறாமை போன் றவை.

**வெளிப்பகை** – நம்மை விரும்பாதவர்கள், பொறாமைப்படு பவர்கள், எதிர்ப்பவர்கள்.

**தானாக வரும் பகை** – காரணமின்றி உருவாகும் எதிர்ப்பு.

**நாமே உருவாக்கிக் கொள்ளும் பகை** – தவறான சொல், செயல், முடிவுகளால் ஏற்படுவது.

இவற்றை எதிர்கொள்வதற்கு மனிதனின் தனிப்பட்ட ஆற்றல் மட்டும் போதாது. அதனால்தான் இந்த அதிகாரம் முழுவதும் வள்ளுவர் பெரியாரின் துணையை

கண்,

கவசம்,

வலிமை,

பேறு,

முதல்தனம்,

மதலை (தாங்கும் தூண்)

என்றெல்லாம் கூறி வந்தார்.

இப்போது இறுதியில் ஒரு எச்சரிக்கையை விடுக்கிறார்:

இந்தப் பகையை வெல்வதற்குத் தான் பெரியார்களின் துணை நமக்கு அவசியம். அப்படிப்பட்ட பெரியார்களை விரோதித்துக் கொண்டு, அவர்கள் உறவை இழந்து விடுவது என்பது, பகைவர்களை ஏற்படுத்திக் கொள்வதை விட அபாயகரமானது.

பகை இருந்தாலும் கூட வாழ்ந்து விடலாம். காரணம் பெரியாரின் துணை கூட இருக்கிறது. ஆனால் பெரியாரை இழந்து விட்டு எப்படி வாழ முடியும்?

'தொடர் கைவிடல்' என்றால் என்ன? நல்லவர்களின் தொடர்பைத் தொடராமல் விடுவது பெருந் துன்பம் விளைக்கும். பலரைப் பகைப்பதினும் பத்து மடங்கு தீமை உடைத்து என்பது இப் பகுதியின் பொருள்.

பெரியாரைத் துணைக்கோடல் அதிகாரத்தில் வரும் இக்குறள் (குறள் 450), பெரியோர்களின் துணையை இழப்பது எவ்வளவு பெரிய ஆபத்து என்பதை மிகக் கடுமையான எச்சரிக்கையுடன் உணர்த்துகிறது.

"பகை இருந்தாலும் பெரியார் துணையோடு வாழ்ந்துவிடலாம், ஆனால் பெரியாரையே பகைத்துக் கொண்டால் யாரைக்

கொண்டு வாழ முடியும்?" என்ற கேள்வி வாழ்வின் யதார்த் தத்தைச் சுட்டுகிறது.

மனிதனாகப் பிறந்த எவருக்கும் ஏதோ ஒரு வகையில் பகை என்பது வந்துவிடுகிறது. அப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலை களில், நமக்கு எது சரி, எது தவறு என்று காட்டி, அந்தப் பகை யிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் அரண்களாக விளங்குபவர்கள் பெரியோர்கள். அந்த அரணையே நாம் உடைத்துக் கொண்டால், எல்லாப் பகைகளும் நம்மை எளிதில் வீழ்த்திவிடும்.

வள்ளுவர் சும்மா 'தீமையானது' என்று கூறாமல், "**பத்தடுத்த தீமைத்தே**" (10 மடங்கு தீமையுடையது) என்று ஏன் குறிப்பிடு கிறார்?

பலரைத் தனியாகப் பகைத்துக் கொள்ளுதல் என்றால் பகை வர்கள் வெளியில் இருந்துதான் தாக்குவார்கள். அவர்களைச் சமாளிக்க ஏதேனும் ஒரு வழி பிறக்கும்.

நல்லார் தொடர்பைக் கைவிடுதல் என்னும்போது நம்முடைய புத்தி வேலை செய்யாமல் போகும். தவறான முடிவுகளை எடுப்போம். இது பல பேர் தரும் தீமையை விட, நமக்கே நாம் செய்து கொள்ளும் 10 மடங்கு பெரிய அழிவைத் தரும்.

எதிரிகள் அதிகமாக இருக்கும்போது நமக்கு எச்சரிக்கை உணர்வு இருக்கும், அதனால் தப்பித்துவிடலாம். ஆனால், நல்ல வழி காட்டிகள் இல்லாதபோது நமக்குத் 'திமிர்' மற்றும் 'அறியாமை' வந்துவிடுகிறது. எனவேதான், "உலகமே உனக்கு எதிரியா னாலும் பரவாயில்லை, உனக்கு நல்வழி காட்டும் ஒரு பெரிய

வரின் நட்பை மட்டும் எப்போதும் இழந்துவிடாதே" என்று வள்ளுவர் எச்சரிக்கிறார்.

இதனால் "**பெரியாரைத் துணைக்கோடல்**" என்ற அதிகாரம் ஒரு அழகான வளர்ச்சியுடன் முடிகிறது:

**1.பெரியாரைத் தேடிக் கொள்ள வேண்டும்.**

**2.ஆராய்ந்து துணையாகக் கொள்ள வேண்டும்.**

**3.அவர்களின் அறிவுரையைக் கேட்க வேண்டும்.**

**4.அவர்கள் கண்டித்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

**5.அவர்களை வாழ்க்கையின் முதல்தனமாகக் கருத வேண்டும்.**

**6.எந்தக் காரணத்தாலும் அவர்களின் தொடர்பை இழக்கக் கூடாது.**

**இதுவே வள்ளுவர் காட்டும் நிலையான வெற்றியின் வழி.**

# ஆசிரியரைப் பற்றி

**1. பிறந்த ஊர் புவனகிரி.கடலூர் மாவட்டம் 2026 ஆம் ஆண்டு 67 அகவை ஆகிறது.**

**2.பொறியியல் அமைப்பியலில் (CIVIL) இளங்கலை பட்டமும் நீரியல் மேலாண்மை பொறியியலில் முதுகலை பட்டமும் (ME) பெற்று நெடுஞ்சாலை ஆராய்ச்சி துறையில் மூன்று வருடமும் முத்தையால் தொழில்நுட்பக் கல்லூரியில் 35 வருடங்களும் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.**

**3.கல்லூரியில் பணிபுரியும் பொழுது மாணவர்களுக்காக ஆங்கிலத்திலும் தமிழிலும் சுமார் 20க்கும் மேற்பட்ட தொழில் நுட்ப நூல்களை எழுதியவர்.**

**4.1979 முதல் இலக்கிய, ஆன்மிக, வாழ்வியல் மேடைகளில் பேசி வருபவர்.**

**5."ஆலய தரிசனம்" என்ற மாத இதழை சுமார் 26 ஆண்டுகாலம் நடத்தியவர். தற்சமயம் அது நூல் வெளியீடுகளாகவும், இணையதளமாகவும், youtube சேனலாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது.**

**6.தினகரன், சப்தகிரி, தினமணி, ஓம் சக்தி முதலிய இதழ் களில் ஏராளமான கட்டுரைகளை எழுதியவர். சிறுகதை, நாட் டியம், இசைப் பாடல்கள் என்று இவர் எழுதி பிரசுரமானது மட்டுமே குறைந்தபட்சம் ஆயிரம் இருக்கும்.**

**7.1980 ஆம் ஆண்டு முதல் இவருடைய இசைப் பாடல்கள் வானொலி நிலையத்தில் வலம் வந்திருக்கின்றன.**

**8.கவியரங்கங்களில் பங்கு கொண்டு கவிதை பாடி இருக் கிறார் .தலைமை தாங்கியும் இருக்கிறார்.**

**9.அகில இந்திய வானொலியில் சுமார் 30 ஆண்டு காலம் ஏராளமான நிகழ்ச்சிகளை வழங்கியவர். ஆனந்தரங்கம் பிள்ளை, காலம் செதுக்கிய கடலூர் மாவட்டம், கிருஷ்ணா வதாரம் தொடர்களை வெளியிட்டவர்.**

**10.தமது ஓய்வூதியத்தின் ஒரு பகுதி மற்றும் அவ்வப்போது சில நண்பர்களின் உதவி கொண்டு ஆலய தரிசனம் அறக்கட்டளை என்னும் ஒரு அமைப்பை நிறுவி புத்தக வெளியீடுகள் , ஆன்மீக நிகழ்வுகள், ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி தொகை , மருத்துவ உதவி முதலிய உதவிகளை தன்னால் இயன்ற அளவு தொடர்ந்து செய்து வருபவர்.**

**11. இசையில் குறிப்பாக பண்ணிசையில் நாட்டம் கொண்ட இவர், பிரபந்த ராமாயணம்(பாசுரப்படி ராமாயணம்) மற்றும் சில ஆழ்வார் பாடல்களுக்கு இசையமைத்து முதல் முதலில் ஓர் தொகுப்பை வெளியிட்டார்.**

**12.அடுத்து வரகவி அன்னமாச்சாரியார் பாடல்கள் சிலவற்றை திருமதி சுதந்திரா கோவிந்தராஜன் அவர்கள் தொகுத்துக் கொடுக்க அதனை ஓர் தொகுப்பாக வெளியிட்டார்.**

**13.தமிழில் உள்ள கண்ணனுடைய கீர்த்தனைகளையும் மற்ற தெய்வங்களின் கீர்த்தனைகளையும் தனித்தனியாக இரண்டு ஒலித் தொகுப்பாக வெளியிட்டார்.**

**14.திருப்பாவை முழுவதும் ஒரு தொகுப்பாக வெளியிட்ட தோடு, அதற்கு தினம் விரிவுரை நிகழ்த்தி வெளியட்டுள்ளார்.**

**15.ஆழ்வார்கள் இன் பாசுரங்களை இனிய இசையில் பல பாகங்களாக வெளியிடும் திட்டத்தில் இருக்கிறார்.**

**16.அண்மையில் மதுரை நடன கோபால நாயகி சுவாமிகள கீர்த்தனைகளை ஒரு ஒலித் தொகுப்பாக தயாரித்திருக் கிறார். தயாரிப்பு முடிந்து அது வெளியீட்டுக்காகக் காத்திருக் கிறது.**

**17.கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக, புவனகிரியில் உள்ள நன்னைய ராமானுஜ கூடத்தில் 30 நாள்களும் திருப்பாவை விரிவுரை நிகழ்த்தி வருகிறார்.**

**18.பாரதி இலக்கியப் பேரவை, தில்லைத் தமிழ்ச் சங்கம், புவனகிரி கண்ணதாசன் இலக்கியப் பேரவை மற்றும் பல வைணவ அமைப்புகள் பல்வேறு விருதுகள் வழங்கி பாராட்டி இருக்கிறார்கள்.**

**19.இதுவரை சுமார் 60க்கும் மேற்பட்ட தமிழ் இலக்கிய, வைணவ, வாழ்வியல் வழிகாட்டும் நூல்களை எழுதி வெளி யிட்டு இருக்கிறார்.**

**20.பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது...........**